**கிராமின் கிருஷி மவுசம் சேவா**
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 22-09-2023**

**புதுக்கோட்டை(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-09-22 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-09-23 | 2023-09-24 | 2023-09-25 | 2023-09-26 | 2023-09-27 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 3.0 | 3.0 | 3.0 | 7.0 | 9.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 35.0 | 35.0 | 34.0 | 34.0 | 33.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 25.0 | 24.0 | 24.0 | 23.0 | 23.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 70 | 70 | 80 | 80 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 40 | 50 | 50 | 50 | 50 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 14 | 10 | 10 | 12 | 8 |
| காற்றின் திசை (கோணம்) | 180 | 200 | 200 | 180 | 230 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 7 | 8 | 8 | 8 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் செப்டம்பர் 23, 24, 25 ம் தேதிகளில் லேசான மழையும் மற்றும் 26,27 தேதி மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 33-35 " செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 23°-25° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 08 முதல் 14 கி.மீ வேகத்தில், தென்மேற்கு மற்றும் தெற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

விரிவாக்கப்பட்ட வரம்பு மழை முன்னறிவிப்பு : செப்டம்பர் 27 முதல் அக்டோபர் 03 வரையிலான காலகட்டத்தில் தமிழ்நாடுட்டில்இயல்பிற்கு மேல் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது . அதிகபட்ச வெப்பநிலை மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பானது இருக்கும்.

## குறுஞ்செய்தி :

பருவமழை காலங்களில் மாடுகள் மற்றும் ஆடுகள் தட்டை புழுககளின் தாக்கததிலிருந்து பாதுகாக்க குளம் குட்டைகளுக்கருகில் போவதைத் தடுக்க வேண்டும்.

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | எதிர்பார்க்கப்படும் மழையைக்கெண்டு மானாவாரி நெல் பின் செய் நேர்த்தி 10 பாக்கெட் அசோஸ்பைரில்லம் (2000 கிராம்/ஹெ) மற்றும் 10 பாக்கெட் பாஸ்போ பாக்டீரியா (2000கிராம்/ஹெ ) அல்லது அசோபாஸ் (4000 கிராம்/ஹெ) தொழு உரம் மற்றும் 25 கிலோ மண் கலந்து வயலில் மழை வந்தபின் தூவவும். கடந்த சில நாட்களாக ஓரளவு மழை பெய்து உள்ளதால் நெல் பயிரிடும் விவசாயிகள் விதைப்பு / நடவுக்கு திட்டமிடலாம். சத்துக்கள் குறைவாக உள்ள மண்ணில் இருக்கும் நெற்பயிர் நாற்றங்காலில் இருந்து, 25 நாட்களுக்குப் பின்னர் எடுத்து நடவு செய்ய வேண்டிய தருணங்களில் உள்ள நாற்றுகளை, பிடுங்குவதற்கு 10 நாட்களுக்கு முன்னதாக டிஏபி உரம் இட்டு, அதிகபட்சம் அன்றிலிருந்து 10 நாட்களுக்குள் நாற்றுக்களை எடுத்து நடவு செய்வதே சிறந்ததாகும். |
| மக்காச்சோளம் | தற்போது மக்காசோளம் நடவு செய்துள்ள விவசாயிகள் ஏக்கருக்கு 5 கிலோ சிறுதானிய நுண்ணூட்டம் அல்லது 10 கிலோ சிங்க் சல்பேட் நுண்ணுரத்தினை கொடுப்பதன் மூலம் மக்காசோளப் பயிரில் காணப்படும் நுண்ணூட்ட சத்து குறைபாட்டை நிவர்த்தி செய்யலாம். மேலும் மக்கிய தொழு உரத்துடன் ஒரு ஏக்கருக்கு 2 கிலோ அசோஸ்பைரில்லம் 2 கிலோ பாஸ்போபாக்டீரியாவை கலந்து இட வேண்டும். பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மழை இல்லாத நாட்களில் மேற்கொள்ளவும். |
| நிலக்கடலை | புரட்டாசிப் பட்டத்தில் நிலக்கடலை விதைப்பு மேற்கொண்ட விவசாயிகள் செடியில் விழுதுகள் அதிகமாக பிடிக்க ஜிப்சம் இட்டு (160 கிலோ / ஏக்கர்) மண் அணைக்க வேண்டும். மேலும், நிலக்கடலை செடியில் அதிக காய்கள் மற்றும் மகசூல் பெற இலைவழி தெளிப்பு உரமாக நிலக்கடலை (2கிலோ / 200 லிட்டர் ) தெளிக்க வேண்டும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| மாம்பழம் | மா விவசாயிகள் மாந்தோப்புகளில் கவாத்து செய்யுமாறு அறிவுருத்தப்படுகிறார்கள். மா மரத்தில் தாழ்ந்து இருக்கும் கிளைகள் குறுக்கும். நெடுக்குமாக ஒன்றின் மேல் ஒன்றாக இருக்கும் கிளைகள் நோய் தாக்கிய மற்றும் மெல்லிய பட்டுப்போன அல்லது காய்ந்த கிளைகள் ஆகியவற்றை நீக்க வேண்டும் இதன் மூலம் சூரிய வெளிச்சம் மற்றும் காற்று உள்ளே உள்ள கிளைகளுக்குக் கிடைத்து, மரம் நன்றாக வளர்ந்து பூ பூத்து காய்ப்பிடிக்க ஏதுவாகிறது. வருடத்திற்கு ஒரு முறை ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் நெருக்கமாக உள்ள கிளைகளை வெட்டிவிட்டு ஆரோக்கியமான கிளைகளை மட்டும் விட வேண்டும். |
| வாழை | தற்போது புரட்சி பட்டம் வாழை சாகுபடி செய்யவுள்ள விவசாயிகள் களையை கட்டுப்படுத்த இரத்தன்மை தக்க வைக்க வாழை நடவு செய்யும் போது இடையே உள்ள இடைவெளியில் தட்டைப் பயிரை ஊடுபயிராக பயிர் செய்ய வேண்டும் . |
| தென்னை | தென்னை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் கவனத்திற்கு தற்போது நிலவி வரும் தட்பவெப்பசூழ்நிலையில் மொட்டு அழுகல் நோய் இளம் கன்றுகளில் தென்படுகிறது. இதனைக் |

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| | கட்டுப்படுத்த காப்பர் ஆக்ஸிகுளோரைடு ஒரு லிட்டர் தண்ணீருக்கு 5 கிராம் வீதம், செடிக்கு, செடி ஊற்றவும். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| வெள்ளாடு | தற்போது நிலவும் பருவச்சூழ்நிலையில் ஆடுகளை தாக்கும் துள்ளுமாரி நோய் பரவலாக தென்பட வாய்ப்பு உள்ளது. இந்நோய் எல்லா வயது ஆடுகளையும் தாக்கும். ஆனால் இளம் வயது ஆடுகளே பெரும்பாலும் பாதிக்கப்படுகின்றன. மழைக்குப்பின் புதிதாக முளைத்த பசுமையான புல்வெளியில் மேய்ச்சலுக்குச் செல்லும் ஆடுகளுக்கு இந்நோய் ஏற்படும். இறப்பதற்கு முன் வலிப்பு ஏற்பட்டு துள்ளி துள்ளி விழும். இந்நோயிலிருந்து ஆடுகளை பாதுகாக்க சூரியன் உதித்து ஒரு மணி நேரம் கழித்து ஆடுகளை மேய்ச்சலுக்கு அனுப்பவேண்டும். பருவமழைக்கு முன் ஆடுகளுக்கு துள்ளுமாரி நோய் தடுப்பூசி போடுதல் மிகவும் அவசியம் ஆகும். |
| பசு | அடுத்து வரும் நாட்களில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளதால் கால்நடைகளை மலைச்சாரலில் நனையாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். கால்நடைகளுக்கு அளிக்கப்படும் குடிநீரானது சுத்தமாக இருக்க வேண்டும். மழைக்காலங்களில் வரும் தொற்றுநோய்களை தடுப்பதற்காக சினையுற்ற ஆடுகளுக்கு எதிர்ப்பாற்றலை ஊக்குவிக்கும் வைட்டமின் மற்றும் தாது உப்புகளை தீனைத்துடன் கலந்து கொடுக்க வேண்டும். காற்றின் வெப்பநிலை மற்றும் ஈரப்பதமும் உயர்ந்து காணப்படும் போது முயல்களுக்கு சுவாச அயர்ச்சி ஏற்பட வாய்ப்புள்ளதால் முயல் கொட்டகைகளை முறையாக பராமரிக்க வேண்டும். |

## பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை:

| பிற ( மண்/ நில தயாரிப்பு) | பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பொது ஆலோசனை | வரும் நாட்களில் மழை வாய்ப்புள்ளதால் தென்னை மற்றும் பழ வகை மரங்கள் மற்றும் மர வாசனை பயிர்களை சுற்றி வட்டப் பாத்திகள் அமைத்து மழைநீரை சேமிக்கவும். தேவைக்கேற்ப பாத்திகள் ,களை எடுத்தல் மண் அணைத்தல் மற்றும் மூடாக்கு இடுதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளவும். |